IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 100/2020
P.W.2 - சங்கரன் த/பெ.துரைசாமி
DATE - 13.06.2023.

வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் டைலர் வேலை செய்கிறேன். வாதியும் நானும் சிறுவயது முதல் நண்பர்களா என்றால் ஆமாம். வெங்கடேசன் நிறைய பாண்டு கேஸ்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அந்த வழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. வெங்கடேசன் மற்ற நபர்கள் மீது புகார் கொடுத்தன் பேரில் குற்றவியல் நீதிமன்றங்களில் வெங்கடேசன் சார்பாக நான் சாட்சியம் அளித்தள்ளேன் என்றால் இல்லை. நான் வெங்கடேசன் சார்பாக நிறை வழக்குகளில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதால் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிப்பது முதல் முறை அல்ல என்றாலும் நிறைய வழக்குகளில் இது போல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் இல்லை. பிரதிவாதி சூர்யகுமாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எங்கள் பக்கத்து ஊர்காரர். வாதி வெங்கடேசன் காட்பாடி காந்திநகரில் குடும்பத்துடன் குடியிருக்கிறார் என்றால் ஆமாம், அங்கும் இருக்கிறார், செஞ்சியிலும் இருக்கிறார். வாதி வெங்கடேசன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1000 மீட்டர் தூரம் இருக்கும். பாண்டு எழுதியதாக சொல்லும் எல்.ஆர்.கே. லோகநாதன் காட்பாடி ஒடை பிள்ளையார் கோயில் தெரு அருகில பைனாஸ் நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அவர் சின்னலத்தேரி கிராமத்திற்கு வருவார், போவார். லோகநாதனும் வாதியும் நண்பர்கள்மற்றும் ஒரே இனத்தை சேர்ந்தவாகள் என்றால் சரி தான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் ஒரே நேரத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. ஒவ்வொரு பாண்டும் ஒவ்வொரு தேதியில் தயார் செய்யப்பட்டது. பிரதிவாதி வாதியிடம் ஏற்கனவே வாங்கிய கடனை பைசல் செய்து விட்டார் என்றாலும் அவ்வாறு ஏற்கனவே கடன் வாங்கும் போது வெற்று பேப்பரில் பிரதிவாதியிடம் பொறுப்புக்காக கையொப்பம் பெற்ற பேப்பர்களை பிரதிவாதியிடம் கடனை பைசல் செய்த போது கொடுக்காமல் அதனை வைத்து வழக்கு பாண்டுகளை வாதி தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதற்கு நான் உடந்தையாக இருந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதவாதி சூர்யகுமார் கையொப்பம் தமிழில் போடுவாரா அல்லது தெலுங்கில் போடுவாரா என்றால் தமிழில் தான் போடுவார். வழக்கு பாண்டுகளிலும் தமிழில் தான் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரி தான். சூர்யகுமாரின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவரின் பெயர் வெங்கடேசன். என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். வழக்கறிஞர் தயார் செய்து வைத்திருந்ததில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரி தான். வாதி பிரதிவாதி பெயரில் தயார் செய்த பாண்டுகளில் வாதி என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் சார்பில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

Additional District Judge (FTC),

Vellore.